**சோளம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

First Published : 10 Apr 2011 09:32:36 AM IST

வெள்ளக்கோவில், ஏப். 9: வெள்ளக்கோவில் சுற்று வட்டார விவசாயிகள் தற்போது கோடை காலத்தில் சோளம் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இப்பகுதி விவசாயம் பெருமளவு கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ளதால், வெயில் காலத்தில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து விடுகிறது. இதனால் தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர் வகைகளை பயிரிட முடிவதில்லை. இந்நிலையில், பெரும்பாலான விவசாயிகள் ஆடு, மாடுகள் வளர்த்தும், குறைந்த பரப்பளவில் தக்காளி, கத்தரி, பீர்க்கன், வெண்டைக்காய் போன்ற நாட்டுக் காய்கறி வகைகளை பயிரிட்டும் வருமானம் பெற்று வருகின்றனர்.

சோளம் பயிரின் முற்றிய சோளத் தட்டு மாடுகளுக்கு நல்ல சத்துள்ள தீவனமாக பயன்படுவதாலும், குறைந்த தண்ணீர் போதுமானதாக இருப்பதாலும் பலர் பயிரிட்டு வருகின்றனர்.

**நிலக்கடலை மூட்டைக்கு ரூ.300 உயர்வு**

ஏப்ரல் 11,2011,00:16



விருதுநகர்: விருதுநகர் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் விலை டின்னுக்கு 30 ரூபாயும், நிலக்கடலை பருப்பு மூட்டைக்கு 300 ரூபாயும் உயர்ந்துள்ளது.

விருதுநகரில் சர்க்கரை விலை மூட்டைக்கு 2,795 ரூபாயாக உள்ளது. கடலை எண்ணெய் டின்னுக்கு 1,200 ரூபாயில் இருந்து 1,230 ரூபாயாக உயர்ந்துள்ளது. சூரியகாந்தி எண்ணெய் 1,120 ரூபாயாகவும், பாமாயில் 900 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. நிலக்கடலை பருப்பு 3,600 ரூபாயில் இருந்து 3,900 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலைப் புண்ணாக்கு மூட்டை 2,600 ரூபாயில் இருந்து 2,700 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலை பருப்பு வரத்து குறைந்ததால் நிலக்கடலை பருப்பும், கடலை எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.பருப்பு: உளுந்து விலை மூட்டைக்கு 4,900 ரூபாயில் இருந்து, 5,200 ரூபாயாக உள்ளது. இரண்டாவது ரகம் 4,100 ரூபாயில் இருந்து 4,200 ரூபாய் வரையும், பர்மா பருவட்டு 5,200 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,800 ரூபாயாகவும், பர்மா பருவட்டு 5,250 ரூபாயாகவும் உள்ளது.

துவரை 4,400 ரூபாயில் இருந்து 4,800 ரூபாயாகவும், பொடி துவரை 3,800 ரூபாயாகவும், துவரம் பருப்பு 6,000 ரூபாயில் இருந்து 6,200 ரூபாயாகவும் உள்ளது.

பொடி துவரம் பருப்பு 4,800 ரூபாயாகவும், பாசிப்பயறு 4,400 ரூபாயில் இருந்து 4,300 ரூபாயாகவும், லயன் பருவட்டு 4,900 ரூபாயாகவும், இரண் டாவது ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது.

பாசிப் பருப்பு 6,200 ரூபாயாகவும், ரகம் 5,600 ரூபாயில் இருந்து 5,900 ரூபாயாகவும் உள்ளது. பருப்பு மார்க்கெட்டில் பெரிய அளவில் விலையில் மாற்றம் இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

மைதா 2,180 ரூபாயாகவும், ரவை 2,260 ரூபாயாகவும், கொண்டைக்கடலை 2,700 ரூபாயாகவும், பொரிகடலை 2,050 ரூபாயாகவும் உள்ளது.வத்தல்: புது வத்தல் மூட்டை 7,500 ரூபாயில் இருந்து 8000 ரூபாயாகவும், முண்டுவத்தல் 7,000 ரூபாயில் இருந்து 7,500 ரூபாயாகவும், சோடை வத்தல் 3,000 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

**மலர் காட்சி நுழைவு கட்டணம் தோட்டக்கலை துறை ஏற்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2011,01:55 IST

ஊட்டி : தேர்தல் முடிந்து அரசு அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக இருக்கும் என்பதால் மலர் கண்காட்சி நுழைவுக் கட்டணம், நடப்பாண்டும் தோட்டக்கலைத் துறையே ஏற்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கோடை சீசனை முன்னிட்டு, ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி மே 20, 21,22ம் தேதிகளில் நடக்கிறது; 2 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக நுழைவுக் கட்டண வசூலுக்கான டெண்டர் அறிவிக்கப்பட்டு, தாவரவியல் பூங்காவில் ஏலம் நடக்கும்; இதற்கு, நீலகிரி மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களில் பலத்த போட்டி இருக்கும்.

நுழைவுக் கட்டண வசூல் தனியார் வசம் இருந்த போது, ஏலதாரர்கள் தங்கள் இஷ்டத்துக்கு கட்டணத்தை உயர்த்தி வசூலித்து வந்தனர்; சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் அதிருப்தி அடைந்தனர்; ஏலத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, கடந்த மூன்று ஆண்டுகளாக நுழைவுக் கட்டண வசூலை, தோட்டக்கலைத் துறையே ஏற்று நடத்தி வந்தது. கடந்தாண்டு பெரியவர்களுக்கு 20 ரூபாய், சிறியவர்களுக்கு 10 ரூபாய் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

தேர்தல் முடிந்து அரசு அமைக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக இருக்கும் என்பதால் மலர் கண்காட்சி நுழைவுக் கட்டணம், நடப்பாண்டும் தோட்டக்கலைத் துறையே ஏற்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சுருங்கி வரும் புகையிலை தொழில் : காப்பாற்ற விவசாயிகள் பகீரத முயற்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 11,2011,01:44 IST

பல்லடம் : பல்லடம், கொடுவாய் பகுதிகளில் போதிய மழை வளம் இன்மை காரணமாக, புகையிலை சாகுபடி சுருங்கி வருகிறது. இத்தொழிலை அழிவில் இருந்து காப்பாற்றும் நோக்கத்துடன், இப்பகுதி விவசாயிகள் பிற இடங்களில் இருந்து புகையிலை செடிகளை கொள்முதல் செய்து, பக்குவப்படுத்தி விற்பனை செய்யும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்லடம் பகுதியில் கொடுவாய், ஜல்லிப்பட்டி, வாவிபாளையம், சித்தம்பலம், செஞ்சேரிப்புத்தூர், அவனாசிபாளையம், செஞ்சேரிமலை, செலக்கரிச்சல் உட்பட பல இடங்களில் நீண்ட காலமாக

புகையிலை சாகுபடி 7,000 ஏக்கர் பரப்பளவில் நடந்து வந்தது. 90 நாளில் அறுவடைக்கு வரும் பணப்பயிரான புகையிலை, இப்பகுதி விவசாயிகளின் வாழ்க்கை தரம் மேம்பட "கை' கொடுத்து வந்தது.

கடந்த மூன்றாண்டுகளாக, பல்லடம், பொங்கலூர், கொடுவாய் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்ய வில்லை. இதன் காரணமாக, புகையிலை சாகுபடி தற்போது 2,000 ஏக்கர் என்ற அளவுக்கு மிகவும் சுருங்கி விட்டது. அறுவடைக்கு வரும் பச்சை புகையிலையை விவசாயிகள் அறுவடை செய்து, 15 நாட்கள் காற்று புகாதபடி பெரிய குழிக்குள் போட்டு அடைக்கின்றனர். அதை குழியில் இருந்து எடுத்து, நான்கு நாட்கள் கொடிகளில் உலர்த்தி காயப்போடுகின்றனர். இதையடுத்து, 40 நாட்கள் அம்பாரமாக குவிக்கின்றனர். அம்பாரமாக போடப்படும் புகையிலையை தினமும், அதை பெரிய நீளமான குச்சிகளால் காற்று உள்ளே புகும்படி கிளறி விடுகின்றனர்.

இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட குழிப்புகையிலையை 36 கிலோ எடை கொண்ட மூட்டையாக "பேக்கிங்' செய்து, சென்னையில் உள்ள புகையிலை வியாபாரிகளுக்கு விற்கப்படுகிறது. அரை மீட்டர் அளவுக்கு மேல் நீளமாக உள்ள இப்புகையிலையை வாங்கிச் செல்லும் மொத்த வியாபாரிகள், சின்ன, சின்னதாக வெட்டி பொட்டலமாகவும், விரல் அளவை விட, சற்று நீளமாக வெட்டியும் மொத்த, சில்லரை வியாபாரத்துக்கு அனுப்புகின்றனர். கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலோனர் இப்புகையிலையை விரும்பி நுகர்கின்றனர்.

பல்லடம், பொங்கலூர், கொடுவாய் பகுதிகளில் போதிய அளவு மழை பொழிவு இன்மை காரணமாக தற்போது புகையிலை சாகுபடி பெருமளவு சரிந்துள்ளது. புகையிலையை சாகுபடி செய்த விவசாயிகள், இத்தொழிலை வறட்சி காரணமாக கைவிட்டு விடக்கூடாது என்ற நோக்கத்துடன், தாராபுரம், கோபி, சத்தியமங்கலம், பண்ணாரி போன்ற இடங்களில் இருந்து அறுவடை செய்யப்பட்ட பச்சை புகையிலையை ஒரு செடிக்கு நான்கு முதல் ஐந்து ரூபாய் விலை கொடுத்து வாங்கி வருகின்றனர். அவற்றை குழிக்குள் இட்டு பதப்படுத்தி குழிப்புகையிலையாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர்.

36 கிலோ எடை கொண்ட குழிப்புகையிலை நல்ல தரமிக்கவை ரூ.2,000க்கும், மட்டமான புகையிலை ரூ.1,300க்கும் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இந்த விலை சொல்லும்படியாக லாபம் தரவில்லை என்றாலும், பாரம்பரியமான இத்தொழிலை விட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் பல்லடம், கொடுவாய் பகுதியில் உள்ள புகையிலை விவசாயிகள் தொடர்ந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

**மே மாதம் முதல் யு.ஏ.இ.,க்கு 2 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி**

ஏப்ரல் 10,2011,16:22



புதுடில்லி : வருகிற மே மாதம் முதல் யு.ஏ.இ.,க்கு 2 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்ய உள்ளதாக மார்வெல் தேயிலை தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த தேயிலைகள் மும்பையின் நவசேவா துறைமுகத்தில் இருந்து மே மாத இறுதியில் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. மார்வெல் நிறுவனத்தின் தேயிலை உற்பத்தி 25 சதவீதம் அதிகரித்து, 30 மில்லியன் கிலோ தேயிலையை விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டு 20 மில்லியன் கிலோ தேயிலையை இந்நிறுவனம் விற்பனை செய்துள்ளது. 2010ம் ஆண்டில் இந்தியாவின் மொத்த தேயிலை ஏற்றுமதி 25.95 மில்லியன் கிலோ என்பது குறிப்பிடத்தக்கது.

**கலக்குது கடலை எண்ணெய் விலை நிலக்கடலை மூடைக்கு ரூ.300 உயர்வு**

ஏப்ரல் 10,2011,04:55



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் கடலை எண்ணெய் விலை டின்னுக்கு 30 ரூபாயும், நிலக்கடலை பருப்பு மூடைக்கு 300 ரூபாய் உயர்ந்துள்ளது.விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு 2,795 ரூபாயாக உள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,200லிருந்து 1,230 ஆக உயர்ந்துள்ளது. சூரிய காந்தி எண்ணெய் 1,120 ஆகவும், பாமாயில் 900 ரூபாயாக உள்ளது.

நிலக்கடலைப் பருப்பு 3,600லிருந்து 3,900 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடலைப் புண்ணாக்கு மூடை 2,600 லிருந்து 2,700 ஆக உயர்ந்துள்ளது. கடலை பருப்பு வரத்து குறைந்ததால் நிலக்கடலை பருப்பும், கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

பருப்பு: உளுந்து விலை மூடைக்கு 4,900 லிருந்து 5,200 ரூபாயாக உள்ளது. சுமார் ரகம் 4,100 லிருந்து 4,200 வரையும், பர்மா பருவட்டு 5,200 ஆக உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,800 ஆகவும், பர்மா பருவட்டு 5,250 ரூபாயாக உள்ளது.துவரை 4,400 லிருந்து 4,800 ஆகவும், பொடி துவரை 3,800 ஆகவும், துவரம் பருப்பு 6,000 லிருந்து6,200 ரூபாயாகவுள்ளது.

பொடி துவரம் பருப்பு 4,800 ஆகவும், பாசிப்பயறு 4,400 லிருந்து 4,300 ஆகவும், லயன் பருவட்டு 4,900 ஆகவும், சுமார் ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது.பாசிப்பருப்பு 6,200 ஆகவும், சுமார் ரகம் 5,600லிருந்து 5,900 ரூபாயாக உள்ளது. பருப்பு மார்க்கெட்டில் பெரிய அளவில் விலையில் மாற்றம் இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர். மைதா 2,180 ஆகவும், ரவை 2,260 ஆகவும் கொண்டைக்கடலை 2,700 ஆகவும், பொரிகடலை 2,050 ரூபாயாக உள்ளது.

வத்தல்: புது வத்தல் 7,500 லிருந்து 8000 ஆகவும், முண்டு வத்தல் 7,000லிருந்து 7,500 ஆகவும், சோடை வத்தல் 3,000 ஆகவும், பழைய சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

**பிப்ரவரியில் தேயிலை ஏற்றுமதி 11 % சரிவு**

ஏப்ரல் 10,2011,12:50



புதுடில்லி : பிப்ரவரி மாதத்தில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 11 சதவீதம் குறைந்துள்ளது. இந்த மாதத்தில் 11.93 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தேயிலை கழக வெளியிட்டுள்ள புள்ளி விபரம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 13.35

மில்லியன் கிலோ தேசியலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. வடஇந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவு 22.20 சதவீதம் குறைந்துள்ளது. அதே சமயம் தென்னிந்தியாவில் இருப்ஆ ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவு 9.41 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நாட்டின் தேயிலை ஏற்றுமதி 9.08 சதவீதம் குறைந்துள்ளது.

**கொப்பரை வரத்து அதிகரிக்காததால்விலையில் தொடர் ஏறுமுகம்**

ஏப்ரல் 10,2011,10:26



பொள்ளாச்சி:தேங்காய், கொப்பரை வரத்து அதிகரிக்காததால், மார்க்கெட்டில் விலை உயர்ந்து வருகிறது.கடந்த 2ம் தேதி நிலவரப் படி, காங்கேயம் மார்க்கெட்டில், கொப்பரை கிலோவுக்கு 63 - 65 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,380, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 103 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 18 ஆயிரம், சென்னை உட்பட பகுதிகளுக்கு அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 17 ஆயிரம் விலை வழங்கப்பட்டது.

விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 11, சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள 10 ரூபாய் வழங்கப்பட்டது.நேற்றைய நிலவரப் படி, கொப்பரை கிலோவுக்கு 66- 67.50 ரூபாய், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,480, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 112 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டைதவிர), டன்னுக்கு 18 ஆயிரம் முதல் 18 ஆயிரத்து 500 ரூபாய், பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து, சென்னை உட்பட பகுதிகளுக்கு அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 17 ஆயிரத்து 500 விலை கிடைத்தது.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், 'மார்க்கெட்டில், தேவைக்கேற்ப கொப்பரை வரத்து இல்லாததால், விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 2.50, தேங்காய் டன்னுக்கு 500 விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

**ரூ.1.62 கோடிக்குபருத்தி வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2011,01:59 IST



வெள்ளகோவில்:மூலனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில், மூலனூர், சிவ கிரி, மணப்பாறை, கரூர் பகுதி களை சேர்ந்த விவசாயி கள், பருத்தி கொண்டு வந்தனர். இந்த வார ஏலத்துக்கு 6,340 மூட்டை பருத்தி வரத் தாக இருந்தது. ஆர்.சி.எச்., ரக பருத்தி மூட்டைக்கு அதிக பட்சம் ரூ.6,950; குறைந்த பட்சம் ரூ.6,600; டி.சி.எச்., பருத்தி 8,080; குறைந்த பட் சம் 7,500 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ரூ.1.62 கோடிக்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.

**சென்ற 2010 -11ம் நிதியாண்டில்ரூ.8,220 கோடிக்கு புண்ணாக்கு ஏற்றுமதி**

ஏப்ரல் 10,2011,05:00



புதுடில்லி:உலகின் பல்வேறு நாடுகளில் புண்ணாக்கிற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சென்ற 2010 -11ம் நிதியாண்டில், நம் நாட்டிலிருந்து, 50.72 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதியாகி உள்ளது. இது, மதிப்பின் அடிப்படையில் 8,220 கோடி ரூபாய்.

சென்ற நிதியாண்டில், நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி, கடந்த 2009 -10ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட அளவின் அடிப்படையிலான ஏற்றுமதியை விட, 57 சதவீதம் அதிகம். இதே ஆண்டுகளில், இதன் மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி, 59 சதவீதம்

வளர்ச்சியடைந்துள்ளது. அதாவது, கடந்த 2009 -10ம் நிதியாண்டில், 32.22 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. இதன் மதிப்பு, 5,176 கோடி ரூபாய்.நாட்டின் பல மாநிலங்களில், சென்ற நிதியாண்டில் எண்ணெய் வித்துகள் உற்பத்தி மிகவும் அதிகரித்திருந்தது.

இதனால், புண்ணாக்கு ஏற்றுமதியும் அதிகரித்துள்ளதாக, எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் புண்ணாக்கு வகைகள், வெளிநாடுகளில் கால்நடை மற்றும் கோழித் தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டில் சென்ற நிதியாண்டில், எண்ணெய் வித்துகள் உற்பத்தி, 2.78 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது. இது, 2009 -10ம் நிதியாண்டில், 2.49 கோடி டன் என்ற அளவில் மிகவும் குறைவாக இருந்தது.

மேலும், சர்வதேச சந்தையில் சமையல் எண்ணெய் மற்றும் புண்ணாக்கின் விலை அதிகரித்துள்ளதால், புண்ணாக்கு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு இது லாபம் அளிப்பதாக உள்ளது.சென்ற மார்ச் மாதத்தில் மட்டும், நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி, 2 மடங்கு அல்லது 158 சதவீதம் அதிகரித்து, அதாவது, 2.24 லட்சம் டன் என்ற அளவிலிருந்து, 5.79 லட்சம் டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது.நாட்டின் மொத்த புண்ணாக்கு ஏற்றுமதியில், (50லட்சத்து 71 ஆயிரத்து 779 டன்) சோயா புண்ணாக்கின் பங்களிப்பு, மிகவும் அதிகமாக, அதாவது 39 லட்சம் டன்னாக உள்ளது.

இதையடுத்து, கடுகு புண்ணாக்கு ஏற்றுமதி 9.36 லட்சம் என்ற அளவிலும், ஆமணக்கு புண்ணாக்கு 2.09 லட்சம் டன் என்ற அளவிலும், தவிட்டு புண்ணாக்கு 66 ஆயிரத்து 650 டன் என்ற அளவிலும், கடலை புண்ணாக்கின் பங்களிப்பு 21 ஆயிரத்து 480 டன் என்ற அளவிலும் இருந்தது.நம் நாட்டிலிருந்து ஜப்பான், வியட்நாம், தென்கொரியா, சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள், மிக அதிகளவில் புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து கொள்கின்றன. இவை தவிர, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள், தாய்லாந்து, ஈரான் மற்றும் தைவான் ஆகிய நாடுகளும் குறிப்பிடத்தக்க அளவிற்கு புண்ணாக்கு வகைகளை இறக்குமதி செய்து கொள்கின்றன.

சென்ற மார்ச் மாதத்தில் மட்டும் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட, 141.30 சதவீதம் அதிகரித்து, அதாவது, 1.69 லட்சம் டன் என்ற அளவிலிருந்து, 4.09 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.நடப்பு எண்ணெய் பருவத்தின் (அக்டோபர் - செப்டம்பர்), முதல் அரையாண்டு காலத்தில், புண்ணாக்கு ஏற்றுமதி உயர்ந்துள்ளது.

2010ம் ஆண்டு அக்டோபர் முதல், நடப்பாண்டு மார்ச் மாதம் வரையிலுமாக, 29 லட்சம் டன் புண்ணாக்கு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது, சென்ற ஆண்டின் எண்ணெய் பருவத்தில், 15 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, இக்காலத்தில் இதன் ஏற்றுமதி, 100 சதவீதம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு சமையல் எண்ணெய் உற்பத்தி இல்லாததால், நம்நாடு, இந்தோனேஷியா மற்றும் மலேசியா

ஆகிய நாடுகளிலிருந்து பாமாயிலையும், அர்ஜென்டினா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து, சோயா மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வகைகளையும் இறக்குமதி செய்து கொள்கிறது.

10 சதவீத உற்பத்தி வரியால்சணல் தொழில் பாதிப்பு

ஏப்ரல் 10,2011,04:59



கோல்கட்டா:மத்திய அரசு, சணல் பொருள்கள் மீது 10 சதவீத உற்பத்தி வரி விதித்துள்ளது. இதனால், ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய்வர்த்தகத்தை கொண்டுள்ள சணல் தொழிலில், சணல் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 80 சதவீத தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 2.50 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.

மேலும், பேக்கேஜிங் துறைக்கானசணல் பொருள்களின் தயாரிப்பு செலவும் வெகுவாக அதிகரித்துள்ளது. ஏற்கனவே உற்பத்தி வரி விதிக்கப்பட்ட ஜவுளி மற்றும் பிராண்டட் ஆடைகள் பிரிவின் கீழ் சணல் கொண்டுவரப்பட்டிருப்பது அமைச்சகத்தின் கவனக்குறைவில் நிகழ்ந்திருக்கலாம் என, சணல் துறையை சேர்ந்தவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். உற்பத்தி வரி குறித்த அரசாணையால், அனைத்து சணல் பொருள்களின் ஏற்றுமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, சென்ற மார்ச் 1ம் தேதி வெளியிட்ட அறிக்கையில், பிராண்டட் சணல் பொருள்கள் மீது 10 சதவீத உற்பத்தி வரி விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சணல் பொருள்களை பிராண்டு வாரியாக பிரிக்கும் பணி உள்ளதால், உற்பத்தி வரியை திரும்ப பெற வேண்டும் என்று சணல் வாரிய ஆணையாளர், மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

எனினும் பிராண்டட் மற்றும் பிராண்டட் அல்லாத அனைத்து சணல் பொருள்களுக்கும் வரிவிதிப்பு பொருந்தும் என்று, மார்ச் 24ம் தேதி மற்றொரு அரசாணை வெளியிடப்பட்டதாக இத்துறையை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.எனவே,சணல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை காப்பாற்றும் வகையில், 10 சதவீத உற்பத்தி வரியை விலக்கி கொள்ள வேண்டும் என, இந்திய சணல் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு, மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

**உற்பத்தி குறைவால் தேயிலை விலை அதிகரிப்பு**

ஏப்ரல் 10,2011,04:58



கோல்கட்டா:சர்வதேச சந்தையில், தேயிலை விலை அதிகரித்து வருகிறது. இதன் தாக்கத்தால், இந்திய சந்தையிலும், தேயிலை விலை 29 சதவீத அளவிற்கு உயர்ந்துள்ளது. உலகளவில் தேயிலை உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது. இந்தியா 2வது இடத்தில் உள்ளது.õட்டில், தற்போது, புதிய பருவத்தில் விளைந்த உயர்ரக தேயிலை விலை 29 சதவீதம் அதிகரித்து, ஒரு கி@லா 200 முதல் 213 ரூபாய் என்ற அளவில் விலை போகிறது.

சென்ற ஆண்டில், கிலோ 155 ரூபாய் என்ற விலையில் விற்பனையானது.அதே நேரத்தில், சாதாரண சி.டி.சி. வகை தேயிலையின் விலையும் 15 சதவீதம் அதிகரித்து, கிலோ 130 முதல் 140 ரூபாய் வரை விற்பனையாகிறது. சென்ற ஆண்டின் இதே காலத்தில், இது 130 முதல் 150 ரூபாய்வரை விலை போனது. நாட்டின் தேயிலை உற்பத்தி நடப்பு 2011-12ம் நிதியாண்டில், 8 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில், தனிநபர் தேயிலை பயன்பாடு ஆண்டுக்குசராசரியாக 800 கிராம் என்ற அளவில் உள்ளது. இது, இங்கிலாந்தில் 2.50 கிலோ, அயர்லாந்தில் 1.50 கிலோ, இலங்கை மற்றும்

வங்கதேசம் ஆகிய நாடுகளில் தலா 1.20 கிலோவாக உள்ளது. பாகிஸ்தானில் தனிநபர் தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு சராசரியாக 950 கிராம் என்ற அளவில் உள்ளது.இந்தியாவில், தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு சராசரியாக 3 முதல் 3.5 சதவீதம் வரை அதிகரித்து வருகிறது என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. சர்வதேச அளவில், தேயிலைக்கான தேவைப்பாடு மற்றும் விலை அதிகரித்தை தொடர்ந்து, இந்தியாவிலும் தேயிலையின் விலை உயர்ந்துள்ளது.

**"குட்கா' ரகங்கள் விலைசெயற்கையாக உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2011,02:59 IST

ஈரோடு: நடப்பாண்டு துவக்கத்தில் இருந்தே வெளிமாநிலங்களில் இருந்து "குட்கா' வரத்து குறைந்துள்ளது. புகையிலை தேவை அதிகரித்துள்ளதால், இதன் விலை இரண்டு ரூபாயில் இருந்து எட்டு ரூபாய் வரை உயர்ந்துள்ளது.மஹாராஷ்ட்ரா, ஆந்திரா, கர்நாடகா பகுதியில் இருநது "குட்கா' புகையிலை ரகங்கள் அதிகளவு வருகின்றன. சென்றாண்டு பெய்த பலத்த மலையால், புகையிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது.

வரத்தும் குறைவாகவே உள்ளது. புகையிலை டீலர்கள் சென்றாண்டில் வாங்கி "ஸ்டாக்' வைத்த புகையிலையை, நேரடியாகவும், மறைமுகமாகவும் கூடுதல் விலைக்கு விற்கின்றனர்.பல்வேறு வகையான "குட்கா' பாக்குகள் இரண்டு ரூபாயில் இருந்து எட்டு ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. இதனால், புகையிலை பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.டீக்கடை வியாபாரி ஒருவர் கூறியதாவது:
பொதுவாக டீக்கடைகளில், சிகரெட், குட்கா, புகையிலை போன்றவை இருந்தால் மட்டுமே நல்ல வியாபாரம் நடக்கிறது.

கடைக்கு டீ குடிக்க வருபவர்களை விட, குட்கா, சிகரெட் வாங்க வருபவர்கள்தான் அதிகம். இன்றைய இளசுகள் முதல் பெரியவர்கள் வரை "குட்கா' பாக்குக்கு அடிமையாகியுள்ளனர். காலப்போக்கில், விற்பனை அதிகரித்த நிலையில் புகையிலை டீலர்கள் பதுக்கி வைக்கின்றனர். தவிர, கடைகளுக்கு தட்டுப்பாடு காரணம் காட்டி குறைந்து அளவே விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். சிலர், நேரடியாகவும், மறைமுகமாகவும் விலையை தாறுமாறாக உயர்த்தி விற்பனை செய்வதால், முதலீடு செய்யும் முதலைக் கூட எடுக்க முடிவதில்லை.

மார்க்கெட் நிலவரப்படி "கணேஷ்' புகையிலை மூன்று ரூபாயில் இருந்து ஏழு ரூபாய் வரையும், "கூலிப்' ஐந்து ரூபாயில் இருந்து ஆறு ரூபாய் வரையும், "மிராஜ்' இரண்டு ரூபாயில் இருந்து

மூன்று ரூபாய் வரையும், "ஹான்ஸ்' மூன்று ரூபாயில் இருந்து பத்து ரூபாய் வரையும், குட்கா பாக்கு "சுவாகத்' எட்டு ரூபாயில் இருந்து 12 ரூபாய் வரையும், "மாணிக்சந்த்' சிறியது நான்கு ரூபாயில் இருந்து 10 ரூபாயும், பெரிய பாக்கெட் 20 ரூபாய் வரையும், "சாந்தி' 1.50ல் இருந்து நான்கு ரூபாய் வரையும் விலை உயர்ந்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**நீர் வரத்து நின்ற பின் வாய்க்கால் கரை சீரமைப்பு!**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2011,02:59 IST

ஈரோடு: வெள்ளோட்டில் சேதமடைந்த கீழ்பவானி வாய்க்காலில், நேற்று நீரோட்டம் நின்ற பின், கரை சீரமைப்பு பணி நடந்தது.கீழ்பவானி வாய்க்காலில் வெள்ளோடு அருகே ஓலப்பாளையம் அருகே இரண்டு நாட்களுக்கு முன் கரை உடைந்தது. வாய்க்காலில் வந்த 2,300 கன அடி தண்ணீரும் கசிவு ஏற்பட்ட இடத்தின் வழியே வெளியேறியதால், கரை உடைப்பு பெரிதானது. வாயக்காலில் இருந்து வெளியேறிய வெள்ளம், ஓலப்பாளையத்தில் இருந்து வெள்ளோடு வரையான நெல் வயல்கள் மற்றும் கிராமங்களுக்குள் புகுந்தது.வெள்ள நீரால் வெள்ளோடு அருகே சின்னக்குளம் நிறைந்து, குளம் உடையும் நிலை ஏற்பட்டது.

குளம் உடைந்தால் வெள்ளோடு கிராமம் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டது. குளத்துக்கு வரும் வெள்ளத்தை வெளியேற்ற, குளத்தின் கரை வெட்டப்பட்டது. வெள்ளம், பெருந்துறை சாலையைக் கடந்து வழியாக நெல் வயல்களுக்குள் புகுந்து சென்றது. நூறு ஏக்கருக்கு மேல் நெல் வயல் சேதமடைந்தது.

ஓலப்பாளையம், பள்ளபாளையம், பிச்சன்காடு, சிறுவன்காட்டுவலசு உட்பட வீடுகளில் வெள்ளநீர் புகுந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டது.வாய்க்கால் உடைந்த அன்றே, கரையை அடைக்க அதிகாரிகள் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. வாய்க்காலில் இருந்து நேற்று முன்தினம் காலை வரை தொடர்ந்து தண்ணீர் வெளியேறி, வயல்களை சூழ்ந்தபடி இருந்தது. வெள்ளம் வடியும் வரை அதிகாரிகள் காத்திருந்தனர். மதியத்துக்கு பிறகு, தண்ணீர் வரத்து குறைந்த பிறகே, கரை உடைந்த இடத்தில் மணல் மூட்டைகளை அடுக்கி, மண் கொட்டி அடைப்பை மூடினர்.

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயபிரகாஸ் கூறியதாவது:வாய்க்காலில் தொடர்ந்து தண்ணீர் வந்ததால், பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.நேற்று பிற்பகல் ஓரளவு தண்ணீர் குறைந்ததால், பணிகளை துவக்கினோம். மணல் மூடைகளை அடுக்கி, அதற்கு இணையாக

கரையை உயர்த்தி வருகிறோம். ஜல்லி கலந்த மண்ணைக் கொட்டி கரையை அமைத்து வருகிறோம். இதுவரை 80 சதவீதம் பணி முடிந்துள்ளது. நாளை (இன்று) மாலைக்குள் பணியை முடித்துவிடுவோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**கொப்பரை வரத்து அதிகரிக்காததால்விலையில் தொடர் ஏறுமுகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2011,01:48 IST

பொள்ளாச்சி:தேங்காய், கொப்பரை வரத்து அதிகரிக்காததால், மார்க்கெட்டில் விலை உயர்ந்து வருகிறது.கடந்த 2ம் தேதி நிலவரப் படி, காங்கேயம் மார்க்கெட்டில், கொப்பரை கிலோவுக்கு 63 - 65 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,380, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 103 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டது.

விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 18 ஆயிரம், சென்னை உட்பட பகுதிகளுக்கு அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 17 ஆயிரம் விலை வழங்கப்பட்டது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 11, சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள 10 ரூபாய் வழங்கப்பட்டது.நேற்றைய நிலவரப் படி, கொப்பரை கிலோவுக்கு 66- 67.50 ரூபாய், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,480, தேங்காய் பவுடர் கிலோவுக்கு 112 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டைதவிர), டன்னுக்கு 18 ஆயிரம் முதல் 18 ஆயிரத்து 500 ரூபாய், பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் இருந்து, சென்னை உட்பட பகுதிகளுக்கு அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 17 ஆயிரத்து 500 விலை கிடைத்தது.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "மார்க்கெட்டில், தேவைக்கேற்ப கொப்பரை வரத்து இல்லாததால், விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 2.50, தேங்காய் டன்னுக்கு 500 விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

தினத் தந்தி

**தானியங்கள் கையிருப்பு நன்றாக உள்ளதால் 40 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய பரிந்துரை**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சர்வதேச சந்தைகளில் கோதுமை விலை மிகவும் உயர்ந்து வருகிறது. இந்நிலையில், நம் நாட்டில் உணவு தானியங்கள் கையிருப்பு நன்றாக உள்ளது. எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி இந்தியா, 30 முதல் 40 லட்சம் டன் கோதுமையை எளிதாக ஏற்றுமதி செய்யலாம் என வேளாண் விளைபொருள்களுக்கான விலை நிர்ணய ஆணையம் (சி.ஏ.சி.பி) தெரிவித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு

உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் மத்திய அரசு கடந்த 2007–ஆம் ஆண்டு தொடக்கத்தில் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்தது. 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. மத்திய அரசின் கைவசம் தற்போது ரூ.43,000 கோடி மதிப்பிற்கான உணவு தானியங்கள் கையிருப்பு உபரியாக உள்ளது. இது விதிமுறைப்படி கையிருப்பு வைக்க வேண்டிய அளவிற்கு மேல் மிக அதிகமானதாகும்.

அரசின் தானிய கிடங்குகள் நிரம்பி வழிவதால் அரிசி, கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கலாம் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. சேமிப்பு கிடங்கு வசதிகள் போதிய அளவு இல்லாததால் உணவு தானியங்கள் அதிகம் வீணாகின்றன. எனவே உள்நாட்டு சந்தைகளுக்கோ, உலக சந்தைகளுக்கோ அனுப்பி விடலாம் என அரசுக்கு சில

தரப்பினர் பரிந்துரை செய்துள்ளனர்.

உற்பத்தி மதிப்பீடுகள்

உணவு தானியங்கள் கையிருப்பு அதிகரித்து விட்ட நிலையில், ஜூன் மாதத்துடன் நிறைவடையும் நடப்பு வேளாண் பருவத்தில் நம் நாட்டில் 8.43 கோடி டன் கோதுமை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நெல் உற்பத்தி 9.40 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஏற்றுமதிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

சேமிப்பு கிடங்கு

எனினும் சேமிக்கும் வசதி போதிய அளவு இல்லாத நிலையில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிப்பதால் என்ன பயன் என சில ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர். சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்களில் ஆயிரக்கணக்கான டன் கோதுமை திறந்தவெளியில் பாழாகிக் கொண்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் 10 லட்சம் டன் உணவு தானியங்கள் வீணாகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே அடுத்த ஐந்து ஆண்டுகளில் சேமிப்புக் கிடங்கு வசதியை மேலும் 25 சதவீதம் உயர்த்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உணவு தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் வீணாவதால் ஏற்படும் இழப்பை கருத்தில் கொண்டு, சேமிப்பு மற்றும் குளிர்பதன கிடங்குகள் அமைக்கும் திட்டங்களுக்கு அடிப்படைக் கட்டமைப்பு துறை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுக் கழகம் விவசாயிகளிடமிருந்து நெல், கோதுமை போன்ற முக்கிய உணவு தானியங்களை கொள்முதல் செய்கிறது. சேமிப்புக் கிடங்குகளில் போதிய வசதிகள் இல்லாதது, சரக்கு போக்குவரத்தின் போது உணவு தானியங்கள் சிதறுவது, கிடங்குகளில் தானியங்கள் கெட்டுப் போவது போன்ற காரணங்களால் இக்கழகத்திற்கு கணிசமான அளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ.437.87 கோடியாக இருந்தது. இது 2010–11–ஆம் நிதி ஆண்டில் ரூ.480 கோடியை தாண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு ஆதரவு

இந்நிலையில் சி.ஏ.சி.பி.யும் கோதுமை ஏற்றுமதிக்கு ஆதரவான ஒரு நிலையை எடுத்துள்ளது. இவ்வாணையம் 40 வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து வருகிறது. அண்மையில் அரசிடம் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் வெளிநாடுகளில் நல்ல விலை

கிடைப்பதாலும், உள்நாட்டில் தேவைக்கதிகமாக கோதுமை கையிருப்பு உள்ளதாலும் ஏற்றுமதி மீதான தடையை நீக்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

மேலும் ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது விவசாயிகள் லாபம் ஈட்டவும் வகை செய்யும் என இவ்வாணையம் கருதுகிறது. குறிப்பிட்ட அளவு கோதுமை வெளியேறுவதால் உள்நாட்டில் சற்று விலை உயரும். இது அவர்களுக்கு ஆதாயம் அளிப்பதாக அமையும். சர்வதேச அளவில் எகிப்து, இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் கோதுமைக்கான தேவைப்பாடு அதிகமாக உள்ளது. இந்நிலையில் கோதுமை மட்டுமல்லாமல் அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது குறித்தும் பரிசீலனை செய்யலாம் என சி.ஏ.சி.பி.யின் தலைவர் அசோக் குலாதி தெரிவித்தார்.

குறைந்தபட்ச ஆதரவு விலை

சி.ஏ.சி.பி. ஒவ்வொரு பருவம் தொடங்குவதற்கு சில மாதங்களுக்கு முன் குறிப்பிட்ட பயிருக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது. எந்த விளைபொருள் அதிகம் உற்பத்தி செய்யப்பட வேண்டும், தேவைப்பாடு, பயன்பாடு, விலைவாசி போன்ற பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு ஆதரவு விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. எந்த விளைபொருளின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமோ அதற்கு பொதுவாக அதிக அளவில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அப்போதுதான் விவசாயிகள் எந்த பயிர் லாபம் தரக்கூடியது என்பதை முடிவு செய்து அதன் உற்பத்தியில் ஆர்வம் காட்டுவார்கள்.

குறைந்தபட்ச ஆதரவு விலையை கொள்முதல் விலை என்றும் கூறுவர். பொதுவாக நெல், கோதுமைக்கு அதிக விலை நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது ஒரு குவிண்டால் நெல்லுக்கான ஆதரவு விலை ரூ.1,000–ஆக உள்ளது. அடுத்த பருவத்திற்கு இதனை ரூ.1,080–ஆக உயர்த்த இவ்வாணையம் பரிந்துரை செய்துள்ளது.

தினகரன்

# தேயிலை ஏற்றுமதி சரிவு

பதிவு செய்த நாள் 4/11/2011 1:52:15 AM



புதுடெல்லி : கடந்த பிப்ரவரி மாதத்தில் 1.19 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதாக தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் ஏற்றுமதியான 1.33 கோடி கிலோவை விட 11% குறைவு ஆகும். குறிப்பாக வட இந்தியாவில் கடந்த ஆண்டு 84 லட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு இது 22 சதவீதம் சரிந்து 66 லட்சம் கிலோவாக இருந்தது.

ஆனால், இதே காலத்தில் தென்னிந்தியாவில் தேயிலை ஏற்றுமதி 9.4 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது 48 லட்சம் கிலோவிலிருந்து 53 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் 18.99 கோடி கிலோவாக இருந்த தேயிலை ஏற்றுமதி இந்த ஆண்டில் 16.7 கோடி கிலோவாக குறைந்துள்ளதாக புள்ளி விவரம் கூறுகிறது.